மாண்புமிகு திரு. செ. மாதவன் : பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட வேண்டாமென்று சொல்லமுடியாது. பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட்டால் உற்பத்தி ஏராளமாக ஆகும். உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன. நான் முன்பே குறிப்பிட்டபடி, பெரிய தொழில்களை நடத்துகிறவர்களே ஒப்புக்கொள்கிறார்கள், அவர்களுக்கு வேண்டிய பொருள்களைச் சிறு சிறு பொருள்களை—சிறிய தொழில்களை ஊக்குவித்து அவற்றின் மூலம் செய்தால் செலவு குறையும் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அந்த முறையிலேதான் நாம் முயற்சி செய்துகொண்டு வருகிறோம். எனவே, பெரிய தொழில்களை வேண்டாம் என்று சொல்வது சரியாகாது.

திரு. வி. கே. கோதண்ட்ராமன் : சிறு தொழில்களை ஊக்கப்படுத்துவதற்காகவேண்டி 25 தொழில்களில் இன்ன இன்ன தொழில்கள் என்று இந்த லிஸ்டிலே கொடுத்திருக்கிறார்கள். அவ்வளவும் குடிசை தொழில்களில் தயார் செய்யக்கூடிய பொருள்களாகத் தான் இருக்கின்றன. ஆகவே, நல்ல முறையிலே சிறு தொழில்களை ஊக்குவிக்கக்கூடிய தன்மையிலே சிறு தொழில்களின் மூலம் மோட்டார், பம்பு செட்டு இவை போன்ற பலதரப்பட்ட பொருள்களைத் தயார் செய்வதற்கென்றே ஒதுக்கிவிட ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதுகூட கோவை மாவட்டத்திலே பம்புசெட்டுகள் தயாரிப்பதற்காக ஏராளமான சிறு சிறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. பெரிய தொழிற்சாலைகளின் மூலமாக ஏராளமான உற்பத்தி செய்தால் அது பொருளாதாரத்தைப் பாதித்துவிடும் என்று நான் நினைக்கவில்லை. தொழில்கள் பெருக வேண்டுமென்ற அடிப்படையிலே தான் நாம் இப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுத்து வருகிறோம்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, டிரான்ஸ்போர்ட், எலெக்ட்ரிசிடி போர்டு போன்ற இலாக்காக்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கவேண்டுமானால் சிறு தொழிற்சாலைகள் மூலம் தயாரிக்கப்படுகின்ற பொருள்களை வாங்கிக்கொள்ளவேண்டும், வெளி மாநிலங்களிலிருந்து வாங்கக்கூடாது என்று அரசு கட்டுப்படுத்த முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சில மாநிலங்களிலே அப்படிப்பட்ட விதிமுறைகள் இருப்பதாக அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அரசு நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை அரசு தொழிற்சாலைகளிலே வாங்கவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு அரசு சிறந்த முறையில் ஊக்கம் தரவேண்டுமென்ற கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. அதை எப்படி அமல்படுத்துவது என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 542, 543 தள்ளி வைக்கப்படுகின்றன.

உள்ளாட்சி மன்ற அலுவலகங்களில் திருவள்ளுவர் படம்.

* 544 வினு.—**திரு. கரு. சீமைச்சாமி**
திரு. நா. காசிராமன் } மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர சபை, பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து அலுவலகங்களில் திருவள்ளுவர் படம் வைத்து, திருக்குறளும் எழுதவேண்டுமென தமிழ்நாடு அரசு உத்திரவு ஏதேனும் பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம் என்றால், அதன் விவரம் என்ன ?